# கங்கை பூமிக்கு வந்த கதை

## சாந்திப்பிரியா



நம்மூரில் ஒரு பழமொழி உண்டு. பகீரப் பிரயர்தனம் செய்தாவது காரியத்தை முடிக்க வேண்டும். அதாவது எப்படியாவது ஒரு காரியத்தை முடிக்க வேண்டும் எனில் விடா முயற்சி அவசியம் என்பது பொருள். இன்றைக்கு கங்கை நதி பூமியில் ஓடுகின்றது என்றால் அது பகீரதன் செய்த விடா முயற்சியின் காரணமே என புராணக் கதை கூறுகின்றது.

முன்னொரு காலத்தில் கோசலா என்ற நகரை சூரிய வம்சத்தைச் சேர்ந்த சகாரா என்பவர் ஆண்டு வந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. மூத்தவளுக்கு ஒரே மகன் மட்டுமே. இளையவளுக்கோ அறுபதாயிரம் மகன்கள் பிறந்திருந்தனர். திருமணம் ஆன புதிதில் சகாராவுக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. ஆகவே இமயமலை அடிவாரத்திற்கு தமது இரண்டு மனைவிகளுடனும் சென்று தவம் இருந்தவர் முன் பிருகு முனிவர் தோன்றி அவரது தவத்தை மெச்சி மூத்தவளுக்கு ஒரு மகனும், இளையவளுக்கு அறுபதாயிரம் மகன்களும் பிறப்பார்கள் என ஆசி தந்தார். அவர் கூறியபடி மழலைச் செல்வங்களைப் பெற்ற மன்னன் மன மகிழ்வுடன் நாட்டை ஆண்டு வந்தான். மன்னன் சகாரா தவறாமல் நாட்டில் அஸ்வமேத யாகம் செய்து வந்தான். முனிவர் தந்த ஆசிகளைப் பெற்றவுடன் அவனுக்கு நூறாவது முறையாக அஸ்வமேத யாகம் செய்ய மனதில் எண்ணம் தோன்றியது. நூறாவது முறையும் வெற்றிகரமாக அந்த யாகத்தை செய்து விட்டால் இந்திரனை விட மேலான பதவியை அவன் அடைந்து விடுவான் என அவனுடைய ஆஸ்தான ஜோதிடர்கள் கூறி இருந்தனர். அஸ்வமேத யாகம் என்பது ஒரு வெண் குதிரையை தங்கத் தகடுகளினால் அலங்கரித்து தம் படையினருடன் பல்வேறு நாடுகளுக்கும் அரசன் அனுப்புவான். அந்த குதிரை எங்கெல்லாம் செல்கின்றதோ அந்த நாட்டு மன்னன் அஸ்வமேத குதிரையை அனுப்பிய மன்னனுக்கு கப்பம் கட்ட முன் வந்தால் அந்த குதிரை மேலே செல்லும். மாறாக குதிரையை அவமரியதாதை செய்தால் அதனுடன் தொடர்ந்து செல்லும் மன்னனின் சேனைகள் அந்த நாட்டின் மீது படையெடுக்கும். அந்த செய்தியைக் கேட்ட இந்திரன் மனம் சங்கடத்தில் ஆழ்ந்தது. அஸ்வமேத யாகம் வெற்றி பெற்று விட்டால் சகாரா தன்னைவிட மேலான பதவியைப் பெற்று இந்திரலோக அதிபதி ஆகிவிடுவான். ஆனால் சகாராவை எளிதில் வெற்றி கொள்ள முடியாத அளவு அவன் திறமைசாலி மட்டும் அல்ல பலசாலியும் கூட. அது மட்டும் அல்ல அவன் செய்து வந்த நற்பண்புகள் அவனை பாதுகாக்கின்றன. ஆகவே யாகத்தைத் தடுக்க ஒரே வழி அஸ்வமேத யாக குதிரையை கவர்ந்து சென்று ஒழித்து வைத்து விட வேண்டும்.

அஸ்வமேத யாகம் நடக்கத் துவங்கியது. ஹோம குண்டத்திற்கு செய்த பூஜைகள் முடிந்து விட்டால் குதிரையை பல்வேறு நாட்டிற்கு அனுப்பத் துவங்கி விடுவார்கள். இந்திரன் தந்திரமாக குதிரை  லாயத்திற்குள் புகுந்து அந்த குதிரையை பிடித்துக் கொண்டு அதள பாதாளத்தில் இருந்த கபில முனிவருடைய ஆசிரமத்தின் பின்னால் கட்டி வைத்துவிட்டு வந்து விட்டார். விடிந்தது. குதிரையைக் காணோம். மன்னன் செய்வதறியாது நின்றான். உடனடியாக  தனது இரண்டாம் மனைவியின் அறுபதாயிரம் மகன்களையும் அனைத்து உலகிற்கும் சென்று அந்த குதிரையைத் தேடுமாறு அனுப்பினான். அதுவே அவன் செய்த தவறாகியது. அவர்கள்  புத்தி கெட்டவர்கள், நிதானமற்றவர்கள். அனைத்து உலகிலும் குதிரையைத் தேடிக் கொண்டு போய் அது எங்கும் கிடைக்காததினால் அடுத்து பாதாளத்தில் தேடத் துவங்கினர். கபில முனிவர் ஆசிரமத்தை அடைந்த பொழுது அவரது ஆசிரமத்தின் பின்புறம் கட்டப்பட்டு இருந்த குதிரையைக் கண்டு ஆத்திரம் அடைந்து கண்களில் பட்ட அனைத்தையும் அடித்து றொறுக்கினர். அங்கிருந்த அனைத்தையும் அழிக்கத் துவங்கினர். தியானத்தில் இருந்து கண் விழித்தெழுந்த கபில முனிவர் அவர்கள் செய்த அட்டகாசத்தினால் கொதித்துப் போய் அந்த அறுபதாயிரம் மகன்களையும் ஒரு ஷணத்தில் எரித்து சாம்பலாக்கினார்.  அவரகளுடைய உடல் சாம்பலாகி ஒரு குவியலாக அங்கு கிடந்தது. குதிரையைத் தேடிப்போன மகன்கள் திரும்பி வராததைக் கண்ட மன்னன் கவலையுற்று தன்னுடைய முதல் மனைவி மூலம் பிறந்திருந்த தன்னுடைய பேரனை அவரது மகன்களைக் கண்டு பிடித்து வர அனுப்பினார்.

சகாரா எத்தனை நல்லவரோ, எத்தனை திறமைசாலியோ அத்தனை  நல்ல குணங்கள் கொண்டு இருந்த தனது பேரனை  தன்னுடைய மகன்களை கண்டு பிடிக்க அனுப்பியவுடன் அவனும் தன்னுடைய சித்தப்பாக்களை அனைத்து இடத்திலும் சென்று தேடியபடி பாதாளத்துக்குள் சென்றான். அப்போதுதான் அவர்கள் எரிந்து சாம்பலாகிக் கிடந்த குவியலைக் கண்டான். அசரி ஒன்று நடந்த அனைத்தையும் அவனிடம் கூறி அவர்கள் ஆத்மா சாந்தி அடைய

வேண்டும் எனில் தேவலோகத்தில் இருந்த கங்கை நீரைக் கொண்டு சிரார்தம் செய்தால் மட்டுமே முடியும் எனக் கூறி மறைந்தது. என்ன செய்வது என விழித்தான். அவர்களுடைய ஆத்மா சாந்தி அடைய அவர்களுக்கு சிரார்தம் செய்ய நினைத்தால் ஒரு சொட்டு தண்ணீரும் கூட கிடைக்கவில்லை. யாக வேளையும் நெருங்கிக் கொண்டு இருந்தது. குதிரையை அழைத்துப் போக வேண்டும். வேறு வழி தெரியாமல் கபில முனிவரிடம் சென்று நடந்ததைக் கூறி குதிரையை அழைத்துக் கொண்டு செல்ல அனுமதி கேட்டான். அவரும் அதை அனுமதித்தார். குதிரையை அழைத்துக் கொண்டு போய் தன்னுடைய தாத்தாவிடம் நடந்த கதையைக் கூற வருத்தமுற்ற மன்னன் யாகத்தை நடத்திவிட்டு தன்னுடைய இராஜ்ய பரிபாலனத்தை தனது பேரனிடம் ஒப்படைத்துவிட்டு காட்டிற்குச் சென்று விட்டான்.

இராஜ்ய பரிபாலனத்தை ஏற்ற மன்னன் பேரனான அம்ஷிமன்சா தேவலோகத்திற்குச் சென்று கெஞ்சியும் கங்கை நீர் கிடைக்கவில்லை. அதை பூலோகத்திற்குக் கொண்டுவர இயலவில்லை. ஆகவே அவனும் வெறுத்துப் போய் தன்னுடைய இராஜ்ய பரிபாலனத்தை தன்னுடைய மகனான திலீபன் என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு சன்யாசம் ஏற்றுக் கொண்டு காட்டிற்குள் சென்று விட்டான். இராஜ்ய பரிபாலனத்தை ஏற்ற திலீபனும் தேவலோகத்திற்குச் சென்று கெஞ்சியும் கங்கை நீர் கிடைக்கவில்லை. அதை பூலோகத்திற்குக் கொண்டுவர இயலவில்லை. ஆகவே அவனும் வெறுத்துப் போய் தன்னுடைய இராஜ்ய பரிபாலனத்தை தன்னுடைய மகனான பகீரதன் என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு சன்யாசம் ஏற்றுக் கொண்டு காட்டிற்குள் சென்று விட்டான். பகீரதன் பதவி ஏற்ற பொழுது இராஜ்யமே குழப்பத்தில் இருந்தது. பிரச்சனைகளுக்கு மேல் பிரச்சனை வளர்ந்தன. கபிலரின் சாபத்தினால் சாம்பலாகிக் கிடந்த மூதையரின் ஆத்மா சாந்தி அடைந்தால் மட்டுமே அந்த பிரச்சனைகளை சமாளிக்க முடியும் என்ற உண்மை தெரிய வர, பகீரதன் மனம் தளரவில்லை. தம்முடைய மூதையோர் செய்ய முடியாததை தன்னால் செய்ய முடியும் என நம்பியவன் தனிமையான இடத்திற்குச் சென்று கங்கை நதி பூலோகத்திற்கு வரவேண்டும் எனக் கடுமையான தவத்தில்

ஆழ்ந்துவிட்டார். அவருடைய தவ வலிமையை மெச்சி அவன் முன் காட்சி தந்த பிரும்மா அவர் கேட்டபடி கங்கையை பூலோகத்திற்கு அனுப்ப சம்மதித்து விட்டார். ஆனால் கர்வம் பிடித்த கங்கையோ, பூலோகத்திற்கு வந்தால் பாபம் பெற்ற மக்களும் சாபங்களைப் பெற்ற மக்களும் தன் நதியில் குளிப்பார்கள். அதனால் தன்னுடைய புனிதத் தன்மை கெட்டு விடும் எனவும், மேலும் தன்னுடைய பிரவாகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது, அதனால் பூலோகம் அழிந்தால் தான் பொறுப்பல்ல எனவும் கூறி பூலோகம் செல்ல மறுத்தாள். பகீரதனோ எத்தனை பாபங்கள் செய்த ஆத்மாக்கள் பூமியில் உள்ளனரோ அத்தனை புண்ணியம் செய்த ஆத்மாக்களும் பூமியில் உள்ளனர் எனவும், அவளுடைய புனிதம் அவர்களால் காப்பாற்றப்படும் எனவும் எடுத்துரைத்தும் அவள் பூமிக்குச் செல்ல மறுத்தாள். என்ன செய்வது என பகீரதன் யோசிக்கவில்லை. கங்கையின் கொட்டத்தை அடக்க சிவபெருமானை வேண்டிக் கொண்டு மீண்டும் தவத்தில் அமர்ந்து விட சிவபெருமான் அவர் முன் தோன்றி கங்கை நதி பூமியில் பாயட்டும், நான் அதன் கொட்டத்தை அடக்குகின்றேன் என உறுதியளித்து விட்டார். வேறு வழி இல்லை. கங்கை பூமியில் பாய வேண்டியதாயிற்று. திமிருடன் பயங்கரமாகப் பூமியில் பாய்ந்தாள் கங்கை. பூமியே நடுங்கியது. திமிர் பிடித்து பாய்ந்து வந்த கங்கையைப் பிடித்து தன் தலை முடியில் சிவபெருமான் பின்னி சிறை வைக்க மிண்டும் பூமியில் அவள் வருவது தடைப்பட்டது. சளைக்கவில்லை பகீரதன். மீண்டும் சிவபெருமானை நினைத்து தவமிருக்க தன் தலை முடியில் இருந்து கங்கையின் ஒரு பகுதியை பூமிக்கு ஓட விட்டார். அந்த கங்கையை தன்னுடைய தேரின் பின்னால் வருமாறு கூறிவிட்டு பாதாளம் வழியாக அழைத்துக் கொண்டு சென்றார். அங்கிருந்த தன்னுடைய சாம்பலாகிக் கிடந்த முன்னோர்கள் மீதும் அவளை ஓடச் செய்து அவர்கள் சாப விமோசனம் பெற உதவினார். நாடு நல்ல நிலைக்கு மீண்டும் வந்தது. வெகு காலம் திறமையாக ஆட்சி செய்து வந்தான் மன்னன் பகீரதன். அவருடைய தளராத முயற்சியினால்தான் இன்றும் கங்கை நதி சிவபெருமானின் தலையில் இருந்து பூமியில் பாய்ந்து வருகின்றது.

# How river Ganges flew on earth

## Santhipriya



There is a proverb in Tamil, ‘complete the work by hook or crook like Bhagirath’ which means that determination and tireless effort is needed to attain ultimate success. If today river Ganges flow in earth, it was only due to the tireless efforts of Bhagirath who brought it from Devaloga.

Several thousand years ago Koshala was ruled by a King called Sagara who had two wives. After Sagara got married, he had no issues from his wives. Therefore he went to Himalayas with both his wives and remained in penance to beget children when Maharishi Brigu appeared before him and blessed a son for the elder wife and 60,000 sons to the younger. The King happily returned to his Kingdom and got one son delivered from first wife, while 60,000 boys from the second. He ruled the country in all honesty and performed Ashvamedha Yagna many times to achieve glory. As per the advice of the royal pundits he decided to perform the $100^{th}$ Ashvamedha Yagna which if he successfully carried out would get him glory similar to Lord Indira. The Kings who perform Ashvamedha Yagya used to send a white horse studded with gold plates and ornaments to various countries and whichever King agreed to pay tribute by way of kind or other goods, the horse would be allowed to cross over their land and whoever refused to pay, then the King who sent the horse would wage a war against the King who refused to pay the tribute. Unable to digest the fame of King Sagara, who if successfully perform the Yagya would attain the status equal to him, Lord Indira decided to stop the Yagya by kidnaping the Yagya horse and hide it somewhere so that the Ashvamedha Yagya cannot be performed.

The rituals of the Yagya began and reached the final stage when the horse had to be sent on victory march when the King found that the horse was missing as Lord Indira had already fraudulently kidnapped the white horse and kept it chained in the horse shed of Maharishi Kapila's ashram in the underworld below the sea without anyone's knowledge. Saddened by the missing horse, King Sagara despatched his 60,000 sons to various places to trace the missing horse to proceed with the ritual. That was the biggest mistake he did because they were arrogant and hasty in all their actions. They too went all over the world in search of the horse and finally traced it in the underworld on the back side of the ashram belonging to Maharishi Kapila. Furious over the horse kept chained in the horse shed of the ashram, the 60,000 sons of Sagara ransacked everything they saw when the Maharishi in meditation opened his eyes to see what was happening in his ashram. Angered over their foolish act, he burnt them to ashes with his power. Their burnt bodies became huge heap of ashes. Finding that the

sons too did not return, King Sagara despatched one of his intelligent grandsons of him in search of the missing sons.

The grandson whom he sent was also very efficient and intelligent like his grandfather Sagara and he too reached the underworld after searching for his fraternal uncles all over the universe only to find them remained as heap of ashes in the underworld. As he prayed for their souls to rest in peace and reach heaven, an unknown voice from the air in the underground world told him that only if river Ganges flew over the heap of ashes, the souls of the slain uncles would reach heaven. Surprisingly he could not even get a drop of water in the underground ashram, below the sea, to perform last rites to the departed souls to rest in peace. Finally he was able to meet Maharishi Kapila, learnt of what had happened, sought pardon on their behalf and took away the horse which had been illegally kept chained there after taking permission of the Maharishi. After his return when he narrated the entire story to his grandfather, the saddened King completed the rituals of Ashvamedha Yagya, stepped down from the throne handing over the reins of power to his grandson and went into the forest to stay in penance for peace.

After taking over the reins of powers, Amsimansa, the grandson of Sagara, who found the missing horse, went to Devaloga to request Ganges to flow on earth, but his efforts failed to fetch result. Vexed Amsimansa therefore handed over the reins to his son Dilipa and took to Sanyas and went away. King Dilipa too failed to get Ganges flow on earth and handed over the powers to his son Bhagirath and went away in frustration. When Bhagirath took over the powers, the country was in a state of turmoil over many issues. When he learned from his pundits that those problems would end only if his ancestors lying as heap of ash in the underworld get salvation, he sat on penance requesting river Ganges to flow on earth. Pleased Lord Brahma appeared before him and agreed to send river Ganges to flow on earth. The arrogant Goddess Ganges refused to comply with the directives of Lord Brahma telling that the sinners on earth while taking bath in her would leave their sins over her body and therefore she cannot flow in the land of sinners. King Bhagirath countered her claim by saying that

though the sinners would leave their sins on her, there were more no of people with good deeds who would also bath in her water and their good deeds would counter the effects of the sins. But Goddess Ganges refused to flow on earth. Therefore Bhagirath again sat in penance and pleased Lord Shiva appeared before him to grant his boon. He assured that he would send Ganges to flow on earth and when commanded the Goddess Ganges to flow, she flew in full fury which if allowed to flow would destroy earth. Angered over the defiant attitude of the Ganges, Lord Shiva tied her in his crest and imprisoned her there. Not losing hope, Bhagirath again sat in penance requesting Lord Shiva to do something to allow her to flow from his crest. Kind hearted Lord Shiva released the Ganges to flow on earth in a slow but steady manner. Bhagirath requested Goddess Ganges to follow him and he ran through the underworld where his ancestors body lay in heap of ash, and then came over to the land. Since river Ganges had to flow over the ashes of his ancestors, their souls too went to the heaven, fully satisfied and the earth too got river Ganges flow as sacred river in some places.